# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 19.08.2025**

**OS No. : 410/2022**

**Pw : 1**

**Name :** திருமதி. இந்திரா

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது அப்பா எனக்கு எழுதிகொடுத்த ஏற்பாடு ஆவணத்தின் சொத்து விவரம் எனக்கு தெரியும். அந்த ஏற்பாடு ஆவணம் வா.சா.ஆ.4 ன் அசல் என்னிடம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ன் அசல் ஆவணத்தை நான் எனது அப்பாவிடம் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவண சொத்தின் பட்டா, சிட்டா ஆகியவை எனது பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதற்கான தீர்வையும் நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவண சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவண சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்பதால் அதனை எனது தகப்பனார் ரத்து செய்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பாவின் பூர்வீக சொத்துக்கள். வழக்கு சொத்துக்கள் பட்டாவின் அடிப்படையில்தான் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டவை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் பட்டாவை தவிர, வேறு முந்தைய ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது தாத்தாவின் பெயரிலோ, தாத்தாவின் அப்பாவின் பெயரிலோ ஆவணங்கள் இல்லை.

2 ம் தபசில் 33 ம் சொத்து, ராமசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிராது 2 ம் தபசில் சொத்தில் 6, 7, 8 சொத்து எனது தந்தைக்கு கிரைய வழி சொத்து என்றால் சரியல்ல. பிராது 2 ம் தபசில் சொத்தில் 9, 10 சொத்துக்கள் எனது தந்தைக்கு கிரைய வழி சொத்து என்றால் சரியல்ல. எனது அப்பா கூட்டுக்குடும்ப கர்த்தாவாக இல்லை

என்றால் சரியல்ல. பிராது 2ம் தபசில் 6, 7, 8, 9, 10 சொத்துக்கள் தவிர இதர சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாருக்கு பட்டாவின் அடிப்படையில் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருந்த வரையில் வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் எனது அப்பாதான் அனுபவித்துவந்தார் என்றால் சரிதான். எனக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணத்தை ரத்து செய்தது சம்பந்தமாக நான் என் அப்பாவிடம் எதுவும் கேட்டேனா என்றால் ரத்து செய்யப்பட்ட விவரமே எனக்கு தெரியாது. ஏற்பாடு ஆவணத்தை ரத்து செய்ய எனது அப்பாவிடம் நான் 4 லட்ச ரூபாய் பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஏற்பாடு ஆவணம் செயல்பாட்டிற்கு வரவில்லை என்பதால் வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் அது ரத்துசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் பிராது 1ம் தபசில் சொத்து குறித்து நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

எனது அப்பா இறக்கும் வரையில் எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை, நல்ல பேச்சுவார்த்தையில்தான் இருந்தோம். எனது அப்பா இறக்கும் வரையில் ஆரோக்கியமாக இருந்தார் என்றால் சரியல்ல, இறப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன் நடமாட்டம் இல்லை. அதற்கு சிகிச்சை வழங்கப்பட்டதா என்றால் வீட்டில் வைத்தே சிகிச்சை வழங்கப்பட்டது. எனக்கு தெரியாமல் எனது அப்பா, சார்பதிவாளர் அலுவலகம் சென்று உயில் எழுதிவைத்தது தவறு என்பதுதான் என்னுடைய கட்சி. உயில் ஆவணத்தில் எனது அப்பா கையெழுத்திட்ட விவரம் எனக்கு தெரியாது. உயில் ஆவணம் பற்றி எனது அப்பாவின் மரணத்திற்கு பின்னர்தான் எனக்கு தெரியும். உயில் எழுதிய காலக்கட்டத்தில் எனது அப்பாவிற்கு கை நடுக்கமும், கண்பார்வை குறைபாடும் இருந்தது என்றால் சரிதான். எனது அப்பாவை வலுக்கட்டாயமாக தூக்கிச்சென்று உயில் ஆவணத்தை எழுதிவாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தை வலுக்கட்டாயமாக எழுதிவாங்கியதாக நான் எந்த புகாரையும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கட்சிப்படி எனது அப்பாவிற்கும் பாகம் உண்டு என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது தந்தைக்கு பூர்வீக சொத்துக்கள் என்பதால் நான் கோரும் பாகம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

எனக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்குமிடையே தபசில் சொத்தில் பாகம் வேண்டும் என்பதை தவிர வேறு எந்த கருத்து வேறுபாடும் கிடையாது என்றால் சரிதான். 2ம் தபசில்

சொத்தில் 11 ம் அயிட்ட சொத்தான 23 சென்ட் நிலத்தினை 2 முதல் 4 பிரதிவாதிகள், 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தது சம்பந்தமாக எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை 5 முதல் 7 பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை சிறுவயதிலிருந்தே எனது அப்பாதான் அனுபவித்துவருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை சர்வே செய்து அரசாங்கம் எனது அப்பாவின் பெயருக்கு பட்டா வழங்கியது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது அப்பா, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளது சம்பந்தமாக எனக்கு ஆட்சேபனையில்லை ஆனால் பங்கு வேண்டும் என்றால் சரிதான். உயில் ஆவணத்தின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எனது சகோதரர்களான 2 முதல் 4 பிரதிவாதிகள்தான் தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**(Cross adopted by D5 to D7)**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi